பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஏடு 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 15 திங்கட்கிழமை 31 08 1992 UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 277

# திருமலையில் பஸ் குண்டு வெடிப்பு!

# ராணுவ சிப்பாய் உட்பட 9பேர் பலி!!

## நகர மத்தியில் நண்பகல் சம்பவம்

கொழும்பு, ஆகஸ்ட் 31

திருகோணமலை நகர மத்தியில் — பஸ் நிலையப் பகுதியில் — நேற்று நண்பகல் 11. 30 மணியளவில் தனியார் பஸ் ஒன்றில் திடீரென குண்டு ஒன்று வெடித்தது. இதனால் இராணுவச் சிப்பாய் உட்பட ஒன்பது பேர் உயிரிழந்தனர். சுமார் நாற்பது பேர் வரை படுகாயமடைந்தனர்.

ஐம்பதுக்கும் அதிகமான பயணிகளுடன் தனியார் பஸ் ஒன்று பஸ் நிலையத்திலிருந்து கண்டிக்குப் புறப்படவிருந்த சமயம் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது. அதனால் அருகில் தரித்து நின்ற சில பஸ்கள் சேதமடைந்தன. அவற்றில் இருந்த பயணிகளும் பஸ் நிலையத்தில் காத்திருந்த பயணிகளும் குண்டு வெடிப்பினால் காயமுற்றனர். காயமுற்ற பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் இச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது.

உயிரிழந்தவர்களிலும் காயமடைந்தவர்களிலும் பெரும்பாலானோர் முஸ்லிம்களும் சிங்களவர்களுமே என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் இடம்பெறுவதற்குச் சற்று முன்னர் இளைஞர் ஒருவர் மூடை ஒன்றை பஸ்ஸில் வைத்து விட்டுச் சென்றனர் என்றும் —

அவர் சென்ற சில நிமிடங்களின் பின்னர் மூடைக்குள் இருந்த குண்டு வெடித்தது என்றும் —

பெரும்பாலும் மூடைக்குள் இருந்தது ''டைம் பொம்'' ஆகவே இருக்கவேண்டும் என்று நம்பப்படுவதாகவும்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## போர் தொடரும் வரை குண்டு வெடிப்புத் தொடரும்

### பி. பி. ஸியின் கணிப்பு இது

லண்டன், ஆக. 31

கிழக்கு மாகாணத்தில் இராணுவம் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி எனக் கூறிவரும் திருகோணமலையில் — நகரின் மத்தியில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இப்படி பி.பி.ஸி. நேற்றிரவு கருத்து வெளியிட்டது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து தங்களையும் மக்களையும் பாதுகாப்பதில் தாங்கள் எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகள் குறித்து இராணுவ அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

போர் தொடரும் வரை இது போன்ற குண்டுத் தாக்குதல்கள் தொடரும். இவ்வாறு பி.பி.ஸி, மேலும் கூறியது. [உ-3]

## குமாரியில் மா வந்தது

வடமராட்சி, ஆக. 31

குமாரி கப்பல் நேற்றுக் காலை 7 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் 3 ஆயிரம் மெற்றிக் தொன் மா எடுத்து வரப்பட்டுள்ளது இறக்கும் வேலைகள் உடனே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [உ-165]

## ஜனாதிபதி தேர்தல் வழக்கு: தீர்ப்பு நாளை மறுதினம்?

கொழும்பு, ஆக. 31

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் நாளை மறுதினம் (2 ஆம் திகதி) வழங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் நீதிமன்ற வளாகத்தில் முன்கூட்டியே பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தீர்ப்பு வழங்கவிருக்கும் நீதியரசர்களுக்கு தீர்ப்பு நாளன்றும் அதற்குப் பின்னரும் ஒரு வாரகாலத்துக்குப் பாதுகாப்பு வாகனங்கள் தேவை என்று உயர் நீதிமன்றத்தின் பிரதம பாதுகாப்பு அதிகாரி பொலீஸ் மா அதிபருக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

உயர்நீதிமன்றம் வழங்கவிருக்கும் இத் தீர்ப்பு இறுதியானது என்பதாலும், இதனை எதிர்த்து மேன்முறையீடு செய்யமுடியாது என்பதாலும் புதன்கிழமை வழங்கப்படவிருக்கும் இத் தீர்ப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது.

தலைநகர் கொழும்பிலும் உயர்நீதிமன்ற வளாகத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் எந்தத் தரப்பும் கலவரத்தில் இறங்க அனுமதிக்கக்கூடாது என்பதற்காக பொலீஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தீர்ப்பு எந்தத்தரப்புக்குச் சாதகமாக அமையக்கூடும் என்பது பற்றி பல ஊகங்கள் கொழும்பில் வெளியாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்படு

[5 ஆம் பக்கம் பார்க்க]

## லலித்தை தாக்கிய காடையர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை

கொழும்பு, ஆக. 31

நேற்று முன்தினம் லலித் அத்துலத்முதலி மீது தாக்குதல் நடத்தியவர்களில் ஆறு பேர் அடையாளம் காணப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நேற்றுவரை அவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அடையாளம் காணப்பட்டதாகக் கூறப்படும் ஆறுபேரின் வீடுகளுக்கு பொலீஸார் சென்று விசாரணை நடத்தியதாகவும் எனினும் ஒருவர் கூட நேற்றுவரை கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

காடையர் குழு தாக்குதல் நடத்திய இடத்துக்கு வந்திறங்கப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் — 16 ஸ்ரீ 4906 இலக்கமுடைய வெள்ளை நிற ஸ்ரேஷன் வகன் — தெகிவளைப் பொலீஸ் காவலில் வைக்கப் பட்டிருப்பதாகவும்—

மோட்டார் வாகனப் பதிவாளர் நாயகம் அலுவலகம் நேற்றும் நேற்று முன்தினமும் சனி, ஞாயிறு விடுமுறைக்காக மூடப்பட்டிருந்ததால் வாகன உரிமையாளரைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

தாக்குதல் நடத்த வந்த குழு [illegible]

[5 ஆம் பக்கம் பார்க்க]

## கைதாகிய மீனவர்கள் விரைவில் விடுதலை?

யாழ்ப்பாணம், ஆக. 31

களுத்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்படவிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடபகுதிக் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட மீனவர்களும், தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்லும்போது கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களும் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் களுத்துறை முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

அவர்களே பகுதிபகுதியாக விடுவிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

களுத்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களில் கடந்த வாரம் 18 பேர் விடுதலை செய்யப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ் மாவட்ட ஆயராக வண. யோசப் அடிகள்?

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ். மறைவட்ட ஆயராக வண. இராயப்பு யோசப் அடிகள் (வயது 52) நியமிக்கப்படலாம் என அறியவருகிறது.

இதுவரை காலமும் யாழ். ஆயராகப் பணிபுரிந்து வந்த வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஓய்வு பெற்றுள்ளதை அடுத்து அவரின் இடத்துக்கு வண. யோசப் அடிகள் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருச்சபைச் சட்டங்களில் கலாநிதிப் பட்டம் பெற்ற யோசப் அடிகள் தற்போது சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயப் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்து வருகிறார்.

யாழ். ஆயர் நியமனம் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு அனேகமாக அடுத்த மாதம் எட்டாம் திகதி வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## இடம் பெயர்ந்தவர்களுக்கு வலி. மேற்கில் குடிசைகள்

அராலி, ஆக. 31

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு இருப்பிட வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவர்களுக்குக் குடிசைகளை அமைத்துக் கொடுப்பதென வலி. மேற்கு உதவி அரச அதிபர் செல்வி ரூபினி கனகரத்தினம் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு முகாமிலும் உள்ள மக்களுக்கு அந்த முகாம் அமைந்துள்ள பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவகர் தலைமையில் ஒவ்வொரு குழுவை அமைத்து குடிசைகள் கட்டும் பொறுப்பை அந்தக்குழுவிடம் ஒப்படைக்கவும் கூட்டத்தில் முடிவாகியது.

இக்குழுக்களில் கிராமசேவையாளருடன், உதவி அரச அதிபரின் பிரதிநிதி, அரச சார்பற்ற தொண்டர் நிறுவனப் பிரதிநிதி, சமூகசேவை நிறுவனப் பிரதிநிதி ஆகியோரும் அங்கம் வகிப்பர். [அ-12]

## முகாம்களில் உள்ளோருக்கு மண் சட்டி, பானைகள்!

யாழ்ப்பாணம், ஆக. 31

மானிப்பாய், சண்டிலிப்பாய் பகுதிகளில் அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமையல் பாத்திரங்கள் வாங்கிக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு இப்போது நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன.

ஆனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களிடம் சமையல் பாத்திரம் எதுவுமே இல்லை. அதனால் அவர்களுக்கு சமையல் பாத்திரங்களை வாங்கிக் கொடுக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இப்போது அலுமினியப் பாத்திரங்கள் வாங்க முடியாதென்பதால் மண்சட்டி

[5 ஆம் பக்கம் பார்க்க]

சிக்கனமாய் நீரை செலவழிக்க
இக்கணமே நாமோர் முடிவெடுப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திகை முறாவில் பிள்ளையார் கோவில்

## ஆவணிச் சதுர்த்தி திருவிழா

இன்று [31-08-1992] திங்கள் மாலை அபிஷேக ஆராதனையும், விசேட அர்ச்சனையும் நடைபெற்று, விநாயகப் பெருமான் திருவீதி உலாவும் நடைபெறும்.

விஷேட மேளக்கச்சேரியும்

★ சிறப்பு நிகழ்ச்சியாக ★

" தத்துவ வித்தகர் " கலைமாமணி

S. S. சர்மா அவர்களின்

'ஸ்ரீதேவி' வில்லிசைக் குழுவினரின் வில்லிசையும் நடைபெறும்.

[22364] - உபயகாரர்கள்.



## உமது 1ஆம் ஆண்டில் விழிகள் சிந்தும் அஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 01 | 31 |
| 09 | 08 |
| 1986 | 1991 |

### அமரர் உலகரெட்ணம் சுகன்ஜா
[ஜேர்மன்]

''கடவுள் தனக்கு பிரியமானவர்களை இளமையிலே அழைத்துக் கொள்கிறார்''

உலகரெட்ணம் சுகன்ஜாவின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (31 - 08 - 1992) திங்கள் காலை 6-30 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கும்,
அப்பா, அம்மா, சகோதரி -[ஜேர்மன்],
மாமாமார், மாமிமார், மச்சான்மார்.

12/2, சந்தனமாதா கோயில் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு. [22337]



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 01 | 01 |
| 08 | 08 |
| 1928 | 1992 |

அமரர்
### இளையதம்பி இராசதுரை
[இளைப்பாறிய வரி மதிப்பீட்டாளர் - வருமான வரிக்கந்தோர், கொழும்பு - யாழ்ப்பாணம்]

ஆருயிர் தெய்வமே! அன்புத் தந்தையே!!
மாதம் ஒன்று மறைந்தது.
மனது உங்களை மறக்கவில்லை
மண்ணில் நீங்கள் மறைந்தாலும் எம் கண்ணில்
நீங்கள் நடமாடும் காட்சிதான் மறைந்திடுமா
வாழ்வுக்கு வழிகாட்டி வாழவைத்த எம் -
அன்புத் தெய்வமே!
பூத்து நல்மணத்தைச் சிந்தி வாழ்ந்திடும்
சிறப்பைக் காண
களித்திடும் வேளைதன்னில் வேதனையில் எம்மை
தவிர்க்கவிட்டு விரைந்தீர்கள் விண்ணுலகம்
ஆறாது துயரமப்பா ஆண்டுகள் பல சென்றாலும் -
எங்கள்
எண்ணமதில் என்றும் நீங்கள் எங்களுடன்
வாழ்கின்றீர்கள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எங்கள் உள்ளக் கோவில்களில் அன்பு மலர்தூவித் துதிக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி: கமலாதேவி,
பிள்ளைகள்: சாந்தி, கௌரி.

யூனியன் கல்லூரி மேற்கு ஒழுங்கை,
தெல்லிப்பழை. (22361)


## சிகிச்சை நிலையம்

வடமராட்சி, ஆக. 31

அல்வாயில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## பால் மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 31

வலி. மேற்கிலிருந்து இடம்பெயர்ந்து மானிப்பாய் பகுதி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயம் பால் மா விநியோகம் செய்துள்ளது. 640 பைக்கெட் பால் மா இவ்வாறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது (த)

## கல்வி அமைச்சு பேச்சுவார்த்தை

கொழும்பு, ஆக. 31

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து நாட்டின் ஏனைய இடங்களில் தற்காலிகமாகக் கடமை புரியும் ஆசிரியர்கள், யாழ். மாவட்டத்தில் அமைதி ஏற்படும் வரை தொடர்ந்தும் அந்தந்த இடங்களில் கடமைபுரிய அனுமதிப்பது குறித்து கல்வி அமைச்சு கல்விச் சேவை ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [த-எ]

## தென்னகப் பிரிவு தலைவர் எஸ்.கே. சன்

சென்னை, ஆக. 31

இந்தியக் கடற்படை தென்னகப் பிரிவுத் தலைவராக வைஸ் அட்மிரல் எஸ். கே. சன் நேற்று முன்தினம் கொச்சியில் பதவியேற்றார்.

வைஸ் அட்மிரல் காசிராஜுக்குப் பதிலாகப் பொறுப்பேற்றுள்ள திரு. சன் அந்தமான் நிக்கோபார் கோட்டை கொத்தள கொமாண்டராகப் பணியாற்றியவர். (த-10)


**University of Jaffna**
**TENDER NOTICE**

Tenders are invited for the following from contractors registered for building works with University of Jaffna or ICTAD.

1. Improvements at Ramanathan Academy of Fine Arts-Construction of temporary class rooms. [2 No.]

Tender forms can be obtained from works Engineer, University of Jaffna from 07-09-92 — 09-09-92 during working hours on producing a receipt from Bursar, University of Jaffna for the following:

Non - refundable deposit — Rs. 250/-
Refundable deposit — Rs. 2,000/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 23-09-92 at 10.00 a.m.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

- Registrar.
University of Jaffna,
Thirunelvely,
Jaffna. [C-2099]


## டென்மார்க்கும் அகதிகளை திருப்பி அனுப்புமாம்!

கொழும்பு, ஆக. 31

இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்ப டென்மார்க் அரசு தீர்மானித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

டென்மார்க் அரசின் இந்த முடிவு இரண்டு வாரங்களுக்கு முன்பு அங்குள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகளிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

சுமார் ஐந்நூறு இலங்கை அகதிகள் டென்மார்க்கில் உள்ளனர். [த-எ]

## ஜனாதிபதித் தேர்தல்: பொதுவேட்பாளராக சிறிமா லலித் - காமினி எதிர்ப்பு!

கொழும்பு. ஆக. 31

ஜனாதிபதி தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை பொதுவேட்பாளராக நியமிக்கும் முயற்சிக்கு லலித்-காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மறுப்புத் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்மைப் பொது வேட்பாளராக நியமிக்க சகல எதிர்க் கட்சிகளும் ஆதரவு தெரிவித்து இருப்பதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்து வரும் கூற்றை உறுதிப்படுத்த லலித் அத்துலத் முதலியும் காமினி திஸநாயக்காவும் திட்டவட்டமாக மறுத்து விட்டனர் என்றும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (த-எ)

## சுகாதாரக் குழுக்களுக்கு நான்கு நாள் பயிற்சி!

மக்களிடையே சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் அவர்களின் பங்களிப்பைப் பெறும் முகமாகவும் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டார ரீதியாக அமைக்கப்பட்ட சுகாதார குழுக்களின் பிரதிநிதிகளுக்கு 4 நாள் பயிற்சி வழங்க உள்ளது.

''யுனிசெப்'' அமைப்பின் உதவியுடனேயே இப்பயிற்சி இடம்பெறுகிறது. பயிற்சியின் தொடர் நடவடிக்கையாக சில வேலைத் திட்டங்களும் செயற்படுத்தப்பட உள்ளன.

நாளை முதலாந் திகதி முதல் நான்காம் திகதி வரை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். (த-30)


உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனேநம

**MATHAN GOLD WORK SHOP**

புதிய டிசைன்களில்
## சங்கீதா வளையல்கள்

செய்யவும் உடனுக்குடன் அடித்துப் பெற்றுக்கொள்ளவும்

★ மதன் தங்கத் தொழிற்சாலை ★

301, கஸ்தூரியார் வீதி,
மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
K. ஞானசேகர்
(22368)



## இடமாற்றம்

வடலியடைப்பில் இயங்கி வந்த
### டாக்டர் பாலபாஸ்கரன்

அவர்களின் வைத்திய நிலையம் மீண்டும் 30 — 08 — 1992 தொடக்கம் கீழ் குறிப்பிடும் புதிய இடத்தில் வழமை போல் இயங்குகிறது.

**புதிய விலாசம்:**

★ மானிப்பாய் சந்தியில் இருந்து உடுவில் செல்லும் பிரதான வீதியில், றோஸ் பிராண்ட் ரெசிபிக் கொம்பனிக்கு அருகாமையில் உள்ளது.

**சிகிச்சை நேரம்:**

தினசரி

காலை 8 மணி — மதியம் 12 மணி வரை
மாலை 3 மணி — மாலை 6 மணி வரை

[22363]



## தேன் சுரபி

சைவ உணவகம்

"மதிய உணவு"

அன்பர்கள், வாடிக்கையாளர்கள்,
பல்கலைக்கழக மாணவர்களுக்கு
விசேட சலுகையுண்டு.

பலாலி றோட்,
திருநெல்வேலிச் சந்தி. [சி-3207]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டிலிப்பாய், மானிப்பாய் பகுதி

# முகாம்களில் சுகாதாரச் சீர்கேடு; நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 31

சண்டிலிப்பாய், மானிப்பாய் பகுதிகளில் அமைந்துள்ள அகதி முகாம்களில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகளை நீக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

முகாம்களில் நிலவும் சுகாதார சீர்கேடுகளை ஆராய்வதற்காக, சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே மேற்படி கோரிக்கை விடப்பட்டது.

சுகாதார சீர்கேட்டை நீக்க உடன் நடவடிக்கை எடுப்பதாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கூட்டத்தில் உறுதியளித்தார்.

இதே வேளை —

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட முகாம்களில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண வேலைகளை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபரும், கிராம சேவையாளர்களும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். [த-3-152]

## பல்கலை. பட்டமளிப்பை அடுத்து இருகலை நிகழ்வுகள்

எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெற உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து முதல் முறையாக இரண்டு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

செப்டம்பர் மாதம் ஆறாம் திகதி சனிக்கிழமை இராமநாதன் நுண்கலைத் துறையினர் ஒரு மணி நேரக் கலை நிகழ்ச்சியொன்றை வழங்குவர். இதில் பண்ணிசையும், வாத்திய விருந்தும், பரத நாட்டியமும் இடம்பெறும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் தனிப்பொரு துறையாக அண்மையில் அமைக்கப்பட்ட பின்னர், முதல் முறையாக இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து இக்கலை விருந்தைப் படைக்கின்றனர். காலை 9-00 மணிக்குத் தொடங்கும் மேற்படி நிகழ்ச்சி, கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

அடுத்த நாள் கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 4-30 மணிக்கு நடைபெறும் மற்றொரு கலை நிகழ்ச்சியில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவிகள் பங்குபற்றும் நாட்டிய நாடகம் இடம்பெறும். (அ-த)

## தடை செய்யப்பட்ட பொருள்களைக் கடத்திய வடக்கைச் சேர்ந்த 29 பேர் விடுதலை செய்யப்பட்டனர்

தடை செய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு மறைத்து எடுத்துச் சென்ற போது இராணுவத்தினரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு, மூன்று மாத காலம் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த 29 பேர் கடந்த சனிக்கிழமை மகஸின் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைக்குப் பின் வவுனியா சென்ற இவர்கள் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## மனைப்பொருளியல் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஆக. 31

ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 9 வரையிலான யாழ்.மாவட்டத்தையல், மனைப்பொருளியல் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. மேற்படி போட்டிகள் முன்னர் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறாது என்றும் அறிவிக்கப்படுகிறது. (த)

## வீரப்பன் கோஷ்டியில் முன்னாள் ராணுவத்தினர்?

சென்னை, ஆக. 31

தமிழ்நாட்டில் தலைமறைவாகச் செயல்படும் பிரபல சந்தனக் கடத்தல் காரன் வீரப்பன் தலைமையிலான கும்பலில் முன்னாள் இராணுவத்தினர் சிலர் இருக்கலாம் என்று மாநில பொலீஸார் சந்தேகப்படுகின்றனர்.

வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்கள் பதுங்கு குழிகளில் மறைந்து இருந்து பொலீஸாரைத் தாக்கி வருவதால் பொலீஸாருக்கு இச் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பாதுகாப்பு வழங்கக் கோரிக்கை

சென்னை, ஆக. 31

தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் தீவிரவாதிகளின் நடமாட்டம் கூடுதலாக இருப்பதால் தொலைக்காட்சி நிலையங்களுக்கு மேலும் பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யும்படி தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சங்கம், மத்திய செய்தி-ஒலிபரப்பு அமைச்சர் அஜித் குமார் பாஞ்ஜாவிடம் மகஜர் சமர்ப்பித்துள்ளது. (த-எ)


கொக்குவில் இந்துக் கல்லூரி

**முறைசாராக் கல்வி - ஆங்கிலம் தொழில்திறன் அபிவிருத்தி பயிற்சி**

மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்களை பிரதி அதிபர் திரு. த. தேவராஜா அவர்களிடம் வெள்ளிக்கிழமை 04-09-92 இற்கு முன்பாகச் சமர்ப்பிக்கவும்.

மேலதிக விவரங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இ மகேந்திரன்,
அதிபர்.

29-8-92. (கி-3202)



# கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A. யாழ்ப்பாணம்.

ECO. — திரு. உதயன்
ACC. — திரு. ஸ்ரீ
COM. — பிரபல ஆசிரியர்
LOG. — திரு. சயந்தன்
HIN. — திரு. ஜோதிஸ்வரன்

A/L 93 DAY CLASSES

| நேரம் | செவ்வாய் | வியாழன் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|
| 8 — 9 | Eco. | Eco. | Acc. | Acc. |
| 9 — 10 | Eco. | Eco. | — | — |
| 10 — 11 | Com. | Com. | Com. | Com. |
| 11 — 12 | Acc. | Acc. | Eco. | Eco. |
| 12 — 1 | Log. | Log | Log. | Log. |
| 1 — 2 | Hin. | Hin. | Hin. | Hin. |

★ வாரத்தில் நான்கு நாள் வகுப்புகள் நடைபெறும்.
★ முழுப்பாடத்திட்டமும் ஒரு வருடத்திற்குள் பூர்த்தியாக்கப்படும்.

ஆரம்பம்: 01 - 09 - 1992 காலை 8 மணி

[கி-3174]



# நாவலர் கல்வி கழகம்

ஆனைப்பந்தி.

மீண்டும் வகுப்புகள் ஆரம்பம்:

01 - 09 - 1992

(22365) - நிர்வாகி.



# பதவி வெற்றிடம்

1. TYPIST CUM CLERK
A/L விஞ்ஞானம் படித்த, ஓரளவு Typing தெரிந்தவர்கள்.

2. TYPING, SHORT-HAND-INSTRUCTORS
Typing, Short - Hand கற்பிப்பதற்கு அனுபவமும் ஆர்வமும் உள்ளவர்கள்.

தமது நற்சான்றிதழ்களுடன் காலை 8 - 00 முதல் 4 - 00 வரை 05 - 09 - 92 இற்கு முன் நேரில் வரவும்.

BOND INSTITUTES,
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி/3211]



பாரதிதாசன் கல்வி நிறுவனம்

**BECON Study Centre**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 93 DAY CLASSES

(ஒரு வருட வகுப்பு)

பொருளியல்: வரதராஜன் [8-00 — 9-30]

கணக்கியல்: சௌந்தி [9-30 — 11-00]

வர்த்தகம்: பசில் [11-00 — 12-00]

அளவையியல்: பிரபானந்தன் [12-00 — 1 00]

தமிழ்: அமரசிவம் [9-30 — 11-00]

இந்துநாகரிகம்: அமரசிவம் [1-00 — 2-00]

ஆரம்பம்: 01-09-1992
செவ்வாய் 8-00 a.m.

[கி-3087]


## ஆண்டுப் பூர்த்தியும், ஆத்ம சாந்தியும்

ஆண்டவன் படைப்பு: 18 — 09 — 1916



ஆண்டவன் அழைப்பு: 12 — 09 — 1991

அமரர்

**அம்பலவாணர் இராசையா**

திதி: 31-08 1992

அன்பிலே சிறந்து, பண்பிலே உயர்ந்து, சேவையிலே மிளிர்ந்து, கற்றோரும், மற்றோரும் போற்றிடும் வண்ணம் சைவ ஆசானாய் அறிவுடைய நம்பியாய் அவனியிலே வாழ்ந்து, ஆவணிச் சதுர்த்தியிலே அவன் பதம் அடைந்து ஆண்டொன்று ஆனதுவோ! அப்பா! உங்கள் ஆத்ம சாந்திக்காய் என்றென்றும் இறைஞ்சுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

70, குறொசற் ஒழுங்கை,
சண்டிக்குளி.

[22362]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மேசைகள், வாங்குகள், கதிரைகள், வாங்குகள், இலாச்சி மேசைகள், வீட்டுச் சோக்கேஸ், கடைச் சோக்கேஸ், அலுமாரிகள், ஜன்னல், கதவுகள், இரும்புக் கதவுகள் (கேற்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (22332)

### மலிவு விற்பனை

மாணவர்களுக்கு அப்பியாச கொப்பி, புத்தகங்கள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. றோணியோ, குறித்த தவணையில் தரமாகச் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம். [கி 3181]

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள்! சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ், இல. 284, கிறான்வி வீதி, [பழைய விகாரை முன்பாக] யாழ்ப்பாணம். [22345]

### எழுதுநர் பரீட்சை

எழுதுநர் போட்டிப் பரீட்சைத் தகுதித் தேர்வுக்கான மாதிரி வினாத்தாள் [பொது விவேகப் பயிற்சிகள்] 10-9-92 வெளிவருகின்றது. ஆக்கம்: க. குணராஜா. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [22308]

### புலமைப்பரிசில் பரீட்சை

23 - 08 - 1992 அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆண்டு-5 [புலமைப் பரிசில்] பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58 A, கிறான்வி வீதி, யாழ்ப்பாணம். [கி-3162]

### பிரத்தியேக வகுப்புகள்

A/L வகுப்புகளுக்கு பொருளியல், வர்த்தகம், அளவையியல், கணக்கியல், O/L வர்த்தகமும், கணக்கியலும் குறைந்த கட்டணத்தில் வீட்டிலும், நேரில் சென்றும் கற்பிக்கப்படும். தொடர்பு; இல. 858, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5280)

### மணமகன் தேவை

யாழ். கத்தோலிக்க, 33 வயதுடைய, அழகிய, குற்றமற்ற கொழும்பில் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றில் கனிஷ்ட நிர்வாகியாக (Junior Executive) தொழில்புரியும் மகளுக்குப் பெற்றோர் பொருத்தமான வரனைத் தேடுகின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும். முதற்கடிதத்திலேயே முழு விவரங்களையும் தரவும். இல. 436, மே/பா உதயன். [22359]

### தவறிவிட்டன

வைரமுத்து சிதம்பரநாதன் ஆகிய நான் நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து கந்தர் மட வீதிக்கு வரும்பொழுது சிறிய கவருடன் இல. 510773667X தேசிய அடையாள அட்டையும், இலங்கை போக்குவரத்துச்சபை அடையாள அட்டையும் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க. நல்லையா, மலவேம்படி லேன், சதுமலை கிழக்கு, மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [4956]

திருமதி தனபாக்கியம் இராமசாமி ஆகிய நான் கந்தரோடையிலிருந்து சுன்னாகத்திற்கு வரும்போது கவருடன் மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் பூ. தர்மலிங்கம், ப. நோ. கூ. ச., சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [4957]

### துர்க்கா திருமண சேவை

31-8 92 தொடக்கம் துர்க்கா திருமண சேவை. சிவசக்தி ஸ்ரோர்ஸ் இல. 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம். சகலரும் மேற்கூறிய முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். [4951]

## ஆர். விக்கு ஓய்வூதியம்

முன்னாள் ஜனாதிபதி இராமசாமி வெங்கடராமனுக்கு சுதந்திரப் போராட்ட வீரருக்கான ஓய்வூதியம் வழங்க புதுடில்லி அரசு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (த-எ)

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்

யாழ்ப்பாணம்.

**(Becon Study Centre)**

## A/L 93

மீட்டல் வினா-விடை வகுப்பு

பொருளியல்

**வரதராஜன்**
B. A. (Hons)

ஆரம்பம்:
**05 — 09 — 1992**
சனி 1-00 p.m.

★ எமது நிறுவன மாணவர்களுக்கு இவ் வகுப்பு இலவசமானது.
★ ஏனைய மாணவர்களில் ஒரு குறிப்பிட்டளவினரே அனுமதிக்கப்படுவர்.

[கி 3208]

## பண்டத்தரிப்பு, பரிஷ் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

அங்கத்தவர்கள், பணியாளர்கள், நிர்வாக

## உறுப்பினர்களுக்கு அறிவித்தல்


அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்க முடியாதிருந்த எமது சங்க அலுவலகம் மானிப்பாய் மத்திய சந்தைக்கு அருகில் உள்ள பனம் பொருள் அபிவிருத்திச்சபை உற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதியில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

அங்கத்தவர்கள், பணியாளர்கள் இவ்விடத்தில் தமது கருமங்கள் தொடர்பாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஏனைய எம்மோடு தொடர்புடைய நிறுவனங்களும் இவ் விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர். பதில் பொது முகாமையாளர்,
பண். பரிஷ். தெ. ப. பொ.
உ. வி. கூ. சங்கம்.

(கி/3180)

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்

**பாலசுப்பிரமணியம் விஷ்ணுகரன்**

அன்னையின் மடியில்: **04—01—1965**
அரக்கரின் பிடியில்: **24—08—1990**

திதி: **31 — 08 — 1992**

ஆவணி மாத சதுர்த்தியிலே — விஷ்ணு
அரக்கரின் கையிலே அகப்பட்டாய்!
கோட்டையைப் பிடிக்க வெறியர்களின் - கங்கணம்
உன் உதிரத்தை மட்டுமல்ல! உயிரையே...
எங்கள் நெஞ்சம் படுந்துயர் கொஞ்சமில்லை
தாளாத துன்பத்தை தேற்றுவாரில்லை;
பாசமுடன் நெஞ்சில் படமெழுதி நாமெல்லாம்!
நினைவு மலர் தூவி நித்தமுமை அஞ்சலிப்போம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்கள்.

வேலணை வடக்கு,
சோளாவத்தை - 5

(22228)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 — 07 — 1928



மறைவு: 28 — 08 — 1985

## அமரர் சி. செல்வராஜா

ஆண்டுகள் பல சென்றாலும்
உங்கள் அன்பு நினைவு
எங்கள் இதயங்களில் என்றும்
நிறைந்திருக்கும் அப்பா!

மனைவி, பிள்ளைகள்.

167/8, கோவில் வீதி,
நல்லூர்.

(22353)

## 3ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

பிறப்பு: 16 — 10 — 1946



இறப்பு: 31 — 08 — 1989

## சூசை அல்பேட் எட்வீனம்மா

பாசம், நேசம், அன்பு, கடாட்சம், ஈதல், விருந்தோம்பல், இரக்கம் இத்தனைக்கும் உரித்தானவளே அம்மா!

கூண்டு திறந்ததம்மா தாய்ப் பறவை பறந்ததம்மா கூடிய துணையும் குஞ்சுகளும் தனியே வாடிக்கலங்குதம்மா!

நீர் விட்டுப் போன ஆலவிருட்சம் வேர்பட்டு, விழுது பட்டு கிளை முறிந்து இருந்த கூட்டுப் பறவைகள் வேறு திசை பறந்ததம்மா! நீ சேயாக மீண்டும் இங்கு வந்து பாரம்மா! நிற்கதியற்றவனாக தனி மரமாக நிற்கின்றான் உன்பதி.

ஆண்டவன் சன்னதியில் அவன் புகழ்பாடி நித்திய ஜீவனில் நிலைத்து நிற்க இறைபலி செலுத்துகிறோம்.

"ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலை பிளக்க வேர் வீழ்க்குமே."

ஆன்மா சாந்தி 31 — 08 — 1992
புனித யாகப்பர் ஆலயம் காலை 5-45
கொஞ்சேஞ்சி மாதா ஆலயம் - குருநகர் 6-15
புனித மரியாள் ஆலயம் 02 — 09 — 1992
மாலை 4-00 மணிக்கு.

பிரிவால் துயருறும்:
கணவன் - சூசை அல்பேட்,
தாய், பிள்ளைகள்.

[22350]

A/L பரீட்சை எழுதிய மாணவர்களதும் ஏனையோரதும் வேண்டுகோளுக்கிணங்க

## எழுதுவினைஞர் போட்டி

பரீட்சைக்கான

## ★ விசேட பயிற்சி வகுப்புகள் ★

3ஆவது பிரிவு: ஆரம்பம்: **01-09-1992** பிற்பகல் 2மணி

பாடநெறி: மொழித்தேர்ச்சி, பொதுவிவேகம்.

★ செவ்வாய், புதன், வியாழன் — பிற்பகல் 2 — 5மணிவரை
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ முழுப் பயிற்சிக்கும் — கட்டணம் ரூபா 300/- மட்டுமே.

**ASTAN INSTITUTE**
101/10, STANLEY ROAD, JAFFNA.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

(கி-3170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இந்தப் பூதம் அங்கே பாயலாம்!

ஜனநாயக ஐக்கிய முன்னணியின் முக்கிய தலைவரான திரு. லலித் அத்துலத் முதலி குண்டர் கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளார்.

தெகிவளையில் பொதுமக்களிடம் கையெழுத்துச் சேகரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தபோதே குண்டர்கள் லலித்தைப் பொல்லினால் தாக்கியிருக்கிறார்கள்.

ஜனாதிபதிக்கு எதிராக, லலித்தும் காமினியும் குற்றவியல் பிரேரணை கொண்டு வந்ததோடு இருதரப்பாருக்குமிடையே ஏற்கனவே புகைந்து வந்த பகைமை பெரும் நெருப்பாக மூண்டது. இருசாராருமே ஒருவர் கழுத்தை மற்றவர் அறுத்துவிடும் முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றனர்.

பத்து லட்சம் கையொப்பங்கள் திரட்டும் இயக்கம் ஆரம்பித்த முதல்நாளே கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் அரசியல் குண்டர்கள் தமது காடைத் தனத்தைக் காட்டினர். பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர். நேற்று முன்தினம் கையொப்பம் சேகரிக்கும் இயக்கத்தின் சூத்திரதாரியான, கர்த்தாவான லலித்தே தாக்கப்பட்டு விட்டார்.

இத்தகைய காடைத்தனங்களில் ஈடுபட்டவர்கள் நிச்சயமாக அரசியல் தலைவர்களின் அடி ஆட்கள் அல்லது கூலிப் படையினர் என்பதில் சந்தேகமில்லை.

குண்டர்களை, அடியாட்களை வைத்துத் தமது தீய நோக்கங்களைச் சாதிப்பதில் அரசா, எதிரணியினரா வல்லவர் என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியது. அது ஒரு புறமிருக்க, தெற்கு அரசியலில் அடாவடித்தனமும், காடைத்தனமும், அநாகரிகமான மோதலும், அராஜகமும் தீயாகப் பரவப் போகின்றன என்பதற்கு கோட்டை, தெகிவளைச் சம்பவங்கள் கட்டியம் கூறுகின்றன!

ஜனநாயகம் என்பது வெறும் பெயரளவில் மேடை போட, அங்கு அராஜகமும், காடைத்தனமும் மோதப் போகின்றன. அதனால் பாதிக்கப்படப் போகிறவர்கள் சிங்களவர்கள். ஜே. வி. பி. போன்ற தீவிரவாத இயக்கங்கள் வன்செயல்களை அல்லது அரசுக்கு எதிரான கிளர்ச்சியை அல்லது போரைத் தொடங்குவதற்கு முன்னரே தெற்குக் குழம்பப் போகிறது.

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப வழக்கின் தீர்ப்பு இந்த வாரத்தில் வெளியிடப்படலாம் என்ற சூழ்நிலையில் மோதல்களுக்கு மேலும் இடமுண்டு. சட்டம், ஒழுங்கு குலைந்து சர்வாதிகாரம் தலைதூக்கலாம்.

தெற்குத் தலைவர்கள் தங்களுக்குள் மோதிக்கொள்வதால் அல்லது சிங்கள தேசம் குழம்பிப் போவதால் தமிழர்களின் பிரச்சினை குறித்து அவர்களின் அக்கறை அல்லது கவனம் குறைந்துபோகும் என்று சொல்வதற்கில்லை. இப்போது அவர்களுக்கு எமது பிரச்சினை குறித்து அக்கறை இருந்தால் அல்லவோ புதிய சூழ்நிலையில் அது, குறைந்து போகும் என்று கவலைப்படுவதற்கு!

தமிழர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் சட்டங்கள், நடைமுறைகள் திரும்பிப் போய் சிங்களவர்களையே பாதிப்பது தான் அனுபவமாக இருந்து வருகிறது. அதே போல தமிழர்களுக்கு எதிராக வளர்க்கப்பட்டுள்ள இராணுவப் பூதம் சந்தர்ப்பம் பார்த்து சிங்களவர்கள் மீது பாய்ந்தாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை!

### இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 31

மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டங்களின் விபரம் வருமாறு:

★ கொய்யாத் தோட்டம் அணி எதிர் கிறீன் கிங்ஸ் வி. க அணி

★ றோயல் வி. க அணி எதிர் கணேசன் வி. க. அணி. [த]

### விநாயகர் சதுர்த்தி இன்று

யாழ்ப்பாணம், ஆக. 31

குடா நாட்டில் உள்ள அனேக ஆலயங்களில் இன்று விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படும்.

விசேடமாக விநாயகர் ஆலயங்களில் சதுர்த்தித் திருவிழா விசேட அபிசேகம், பூசைகளுடன் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படும். இரவில் விநாயகர் திரு உலா வருதலும் நிகழும்.

பல விநாயகர் ஆலயங்களில் அலங்காரத் திருவிழாக்களும், சமயச் சொற்பொழிவுகள், இன்னிசை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறும்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் விசேட திருவிழா நடைபெறவுள்ளது. [அ-30]

### உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 31

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. [த-117-30-10]

★ ★ ★

வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது திருவிழாக்கள் பதினைந்து நாட்கள் நடைபெறும். செப்டம்பர் 15 ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம் பெறும். [அ]

★ ★ ★

யாழ். போதனா வைத்திய சாலை சிவஞான வைரவர் ஆலயப் பாலஸ்தாபன கவபவம் இன்று காலை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் திருத்த வேலைகள் நடைபெறவுள்ளன. [அ-15]

### அதிபர்கள் கூட்டம்

மருதனார்மடம் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட— ஆறாம் ஆண்டுக்கும், அதற்கு மேற்பட்ட வகுப்புகளை உடைய — பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கோட்ட அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது. [உ-3]

### இடம் பெயர்ந்த மாணவருக்கு கல்வி வசதி

யாழ்ப்பாணம், ஆக. 31

பாடசாலைகளில் தற்காலிக குடிசைகளை அமைத்து இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு கல்வி வசதி அளிக்க யாழ். செயலகம் யாழ். கல்வி அலுவலகத்துக்கு நிதி வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தேவைப்படும் நிதியினை வழங்க யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் சம்மதம் தெரிவித்திருப்பதாக கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [த-3]

## ராஜீவ் கொலை வழக்கு: குற்றப்பத்திரிகை தமிழில்

சென்னை, ஆக 31

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு குற்றப் பத்திரிகையின் தமிழ்ப் பிரதி வழங்கப்படவிருக்கின்றது.

தமக்கு தமிழில் குற்றப்பத்திரிகை தரப்பட வேண்டும் என்று வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள 26 எதிரிகளும் கோரியதை அடுத்து. சிறப்பு புலனாய்வுப் பிரிவினர் தமிழில் குற்றப்பத்திரிகைகளைத் தயாரித்து வருகின்றனர். [ஒ-எ]

### யுத்தம் நிறுத்தப்பட்டால்

## இரண்டு வருட காலத்தில் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி

### உறுதி கூறுகிறார் பிரேமா

கொழும்பு, ஆக. 31

வடக்கு - கிழக்கு யுத்தம் பூரணமாக நிறுத்தப்பட்டால், அப்பிரதேசத்தினை இரண்டு வருட காலத்தில் அபிவிருத்தி செய்து தருவேன் என்று நான் உத்தரவாதமளிக்கிறேன்.

— ஜனாதிபதி பிரேமதாஸா அம்பாறை நகரமண்டபத்தில் நேற்று நடைபெற்ற திகாமடுல்ல மாவட்ட ஐ. தே. க. மாநாட்டில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி கையிருப்பில் உள்ளது. அபிவிருத்தி வேலைகளை அப்பிரதேசத்தில் மேற்கொள்ள அங்கு முதலில் சமாதானம் ஏற்படவேண்டும். — என்றும் அவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி மாவட்டத்துக்கு பட்டதாரி ஆசிரியர் தெரிவு

முறிகண்டி, ஆக. 31

கிளிநொச்சி மாவட்டத்திற்குப் புதிதாக 17 பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 10 பேர் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள், 7 பேர் கலை, வர்த்தகப் பட்டதாரிகள் ஆவர்.

இவர்களிற்கான நியமனங்கள் இன்று கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தெரிவித்தார்.

### கிழக்கில் தமிழ் கிராமங்களுக்குரிய

## குடிதண்ணீர் விநியோகம் படையினரால் சீர்குலைப்பு

யாழ்ப்பாணம், ஆக 31

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் வாழும் கிராமங்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை சீர்குலைக்கும் விசமத்தனத்தில் ஸ்ரீலங்கா படையினரும், முஸ்லிம் ஊர்காவல்படையினரும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழாய்கள், கால்வாய்கள் மூலமாக அந்தக் கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது

இறைவற்றியுள்ள வரட்சியான இக்காலத்தில் குடிதண்ணீர் விநியோகத் தடையால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் [உ-3]

### அரச திணைக்களங்களுக்கு

## காகிதாதிகள், பொருள்கள் எடுத்து வர அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ் மாவட்டத்தில் இயங்கும் திணைக்களங்களுக்குத் தேவையான காகிதாதிகள் மற்றும் பொருள்கள், பாடசாலைகளுக்கான உபகரணங்கள் ஆகியவற்றை எடுத்து வருவதற்கு கடந்த வாரம் முதல் கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்து வருகிறது.

வடபகுதிக்கு சில பொருள்களை எடுத்துவர தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்கள தேவைக்காக அவற்றில் சில பொருள்களை கணிசமான அளவு எடுத்துவர முன்னர் அனுமதி வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது (உ-3]

## இலங்கை முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 258

கொழும்பு, ஆக. 31

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் கொழும்பு கெத்தாராம விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டவேளை முடிவுற்றபோது இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸ்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று தேநீர் இடைவேளையின் போது 2 விக்கெட்டுகளுக்கு 167 ஓட்டங்கள் எடுத்திருந்த இலங்கை அணி அதன் பின் தனது விக்கெட்டுகளை 'மளமள'வென இழந்தது.

அவுஸ்திரேலியா ஏற்கனவே தனது முதலாவது இன்னிங்ஸில் 247 ஓட்டங்கள் எடுத்திருந்தது தெரிந்ததே.

இன்று ஓய்வு நாளின் பின் ஆட்டம் மீண்டும் நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். [உ-எ-10]

### இன்று

யாழ்ப்பாணம், ஆக. 31

அல்வாய் வடக்கு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்புகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும். [த-155]

### ஸ்ரீ. ல. சு. க. அதிருப்தி

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு, காம்பெல் பூங்காவில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நடத்திய பொதுக் கூட்டத்தில் தமது கட்சி பெரும் அபகீர்த்திக்கு உள்ளாக்கப்பட்டது என்று சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட எம். பிக்கள் தெரிவித்தனர். (த-எ)

### முகாம்களில்..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாணைகளையே வாங்கிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

இளவாலை, மாதகல், அளவெட்டிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கி இருக்கும் சுமார் 15 ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு வார உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் —

சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் புதிதாக அமைக்கப்பட்ட 45 முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு மேலும் ஒரு வாரத்துக்கு உலர் உணவு வழங்கப்பட உள்ளதாகத் தெரியவந்துள்ளது. [அ-3-152]

### கைதாகிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

அவர்களில் கன்னாகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், விடுதலை செய்யப்பட்ட பின்னர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு, அவரது உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் அறியவந்தது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் நலன்களைக் கவனிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் மாதமொரு தடவை களுத்துறை முகாமுக்குச் செல்லவிருக்கின்றனர். [உ-3]

### லலித்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிய போது, அக்குழுவிலிருந்த ஒருவர் ரிவால்வரினால் சுட்டார் என்றும்—

அந்தச் சூடு லலித் அத்துலத் முதலியை எட்டாமல்மேலால் சென்றது என்றும் கொழும்பில் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார். [உ-10]

### திருமலையில்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

இந்த வெடிகுண்டை விடுதலைப் புலிகளே வைத்திருக்க வேண்டும் என ஸ்ரீலங்கா இராணுவத் தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த ஒன்பது பேரில் இருவர் குழந்தைகள் என்றும் இருவர் பெண்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

இந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சர்வதேச சேவைச் செய்தியில் நேற்றுமாலை அறிவிக்கப்பட்டது. [உ-எ-3-10]

### ஜனாதிபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இதற்கிடையில் —

மேற்படி வழக்கு மீதான தீர்ப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்றே [4 ஆம் திகதியன்றே] வழங்கப்படும் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தமக்குத் தெரியவந்திருப்பதாக "லக்திவ" சிங்கள வார இதழின் இணையாசிரியர் வினி வெற்றிகொட தெரிவித்திருக்கிறார்,

1988 ஜனாதிபதித் தேர்தலில் திரு. பிரேமதாஸா தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று அத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த வேட்பாளரான முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இத்தேர்தல் ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்திருந்தார். [உ-எ 10]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இழப்புக்களை மறைக்கவே யாழ். குடா மீது தாக்குதல்

## அஞ்சலிக் கூட்டத்தில் இளம்பரிதி

வடமராட்சி ஆக. 31

தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்டு வரும் பாரிய இழப்புக்களை மூடி மறைக்கவே யாழ். குடா நாட்டின் மீது இராணுவம் பாரிய தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கரவெட்டியில் அண்மையில் நடைபெற்ற மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்த மண்ணை அபகரிக்க எதிரி போடும் திட்டம் ஒவ்வொன்றும் முறியடிக்கப்படும். யாழ். குடா மீதான இராணுவ நடவடிக்கையை தடுத்து நிறுத்த எல்லையில் நின்று போராடும் ஒவ்வொரு புலி வீரனுடன், நாமும் இணைந்து எதிரியை இம் மண்ணில் இருந்து துரத்தியடிக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் செல்வி. தணிகைச் செல்வி, பொன் தியாகம் ஆகியோரும் உரையாற்றினர்.

[த-165]

# தயான் மீது ஜே.ஆர் வழக்குப் போடமாட்டார்!

## மக்களே தண்டித்து விட்டனராம்

அரசியல் விமர்சகர் தயான் ஜெயதிலக மீது வழக்குத் தொடரும் எண்ணத்தைத் தாம் கைவிட்டுவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்திருக்கிறார்.

''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகையில் தம்மை அவதூறு செய்யும் வகையில் தயான் ஜெயதிலக கட்டுரை எழுதியுள்ளார் என்றும்—

அதற்குத் தம்மிடம் அவர் மன்னிப்புக் கோராவிட்டால் அவர் மீது பெரும் தொகை மானநஷ்ட ஈடு கோரி தாம் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் திரு. ஜெயவர்த்தனா அறிவித்திருந்தார்.

ஆனால் வழக்குத் தாக்கல் செய்யும் எண்ணத்தை தாம் கைவிட்டு விட்டதாக இப்போது அறிவித்திருக்கிறார்.

அண்மையில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் முக்கிய தளபதிகளுள் ஒருவரான லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகள் கொழும்பு கனத்தையில் நடைபெற்றபோது, ஆவேசமுற்ற பொதுமக்கள் கூட்டம் ஒன்றினால் தயான் ஜெதியலக நையப்புடைக்கப் பட்டார் என்பது தெரிந்ததே.

பொதுமக்களின் தாக்குதலுக்கு உள்ளானதன் மூலம் தயான் ஜெயதிலகவுக்கு பொதுமக்களினால் தண்டனை வழங்கப்பட்டு விட்டதாலும்—

தயான் ஜெயதிலகவுக்கு ஏற்பட்டுள்ள நிலை காரணமாக அவரின் தாயார் துக்கமுற்றிருப்பதாலும்—

வழக்குப் போடும் தமது எண்ணத்தைத் கைவிட்டிருப்பதாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்திருக்கிறார்.

[உ-10]

## ப.நோ.கூ.ச. கிளைகளில்

# விற்பனையை ஊக்குவிக்க விசேட கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஆக 31

யாழ். ப. நோ. கூ. சங்க கிளைகளில் கூடுதல் விற்பனை நடக்கும் கிளை முகாமையாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவிருக்கிறது.

இரண்டு வட்சம் ரூபாவுக்கு மேல் மாதம் விற்பனை நடக்கும் கிளைகளின் முகாமையாளர்கள், விற்பனையாளர் ஆகியோருக்கு 250 ரூபா ஊக்குவிப்புப் பணம் வழங்கப் படவிருக்கிறது.

முதலாவது கொடுப்பனவு அடுத்த மாதம் 5ஆம் திகதி 15 கிளை முகாமையாளர், விற்பனையாளருக்கு வழங்கப் படவிருக்கிறது.

[உ-3]

# கட்சித் தலைவரை தெரியும் உரிமை சிறிமாவிற்கே உண்டு

## சிரேஷ்ட தலைவர்கள் கருத்து

கொழும்பு, ஆக. 31

சுதந்திரக்கட்சியின் எதிர்காலத் தலைவரைத் தீர்மானிக்கும் உரிமை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு உண்டு.

அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் இக் கருத்தை வெளியிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சியை ஸ்தாபிப்பதற்கு திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா முனைந்த போது, அவர் சந்தித்த சவால்களுக்கு திருமதி சிறிமாவோ தான் பின்னுக்கு நின்று உதவினார் என்பதைப் பலர் இன்று உணர்ந்து கொள்ளவில்லை என்று இச் சிரேஷ்ட தலைவர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர்.

[த-எ]

# பகலில் மீன் பிடிக்க அனுமதி

குடாக்கடல் பகுதியில் பகல் வேளைகளில் மீன் பிடிக்க மீனவர்களுக்கு புலிகள் இப்போது அனுமதி அளித்து வருகின்றனர்.

இதன்படி காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரை கடல் தொழிலில் மீனவர் ஈடுபடலாம்.

கடற் தொழிலாளர்களைக் கைது செய்து கேடயமாகப் பயன்படுத்த ஸ்ரீலங்கா படையினர் திட்டமிட்டிருப்பதாகக் கருதப்படுவதை அடுத்து, கடந்த சில தினங்களாக இரவு வேளைகளில் மீன் பிடிக்கச் செல்லவேண்டாம் என மீனவர்களிடம் புலிகள் கேட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

[உ-51]

# 50 லட்சம் பேர் மலேரியாவுக்கு பலியாவர்!

இனி வரும் ஆண்டுகளில் மலேரியா நோயினால் இறப்போரின் தொகை ஆண்டொன்றுக்கு 50 லட்சமாக உயரக்கூடும்.

விஞ்ஞான அபிவிருத்திக்கான பிரிட்டிஷ் கழகம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் விஞ்ஞானிகள் இக்கருத்தை வெளியிட்டனர்.

மலேரியா கிருமிகளைக் காவும் நுளம்புகள் அவற்றை அழிக்கும் நாசினிகளுக்கு எதிரான எதிர்ப்புத் தன்மையை வளர்த்து வருவதால் எதிர்காலத்தில் நாசினிகள் பயனற்றுப் போகலாம் எனவும் —

ஆபிரிக்கா, தென்னாபிரிக்கா, தென் கிழக்கு ஆசியா நாடுகளில் மலேரியா நோய் பரவும் ஆபத்து பெருகியுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்

[உ-10]

# உலர் உணவு அட்டை விநியோகம்

வலி - வடக்கு பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு மூன்றாவது தொடர் உலர் உணவு அட்டை வழங்கப்படவிருக்கிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் 2 ஆம் தொடர் உலர் உணவு அட்டையுடன் கிராம சேவையாளரிடம் சென்று புதிய அட்டைக்கு பதிவுகளை செய்யுமாறு வலி வடக்கு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.


ஊரெழு ஸ்ரீ மீனாட்சியம்பாள் தேவஸ்தானம்

(கண்ணகை அம்மன் கோவில்)

வருடாந்த மகோற்சவ

3 ஆம் திருவிழாவும் சதுர்த்தி உற்சவமும்

காலம்:- 31-08-92 திங்கள் (இன்று) பிற்பகல் 8.00 மணி

பெரியபுராணத் தொடர்ச் சொற்பொழிவு:- திரு. ஆறு. திருமுருகன்

சிறப்புச் சொற்பொழிவு:- திரு. இ. ஜெயராஜ் (கம்பன் கழகம்)

அனைவரும் வருக!

(22370) — விழா உபயகாரர் —


# புலிகளுடன் தொடர்பு இல்லை:

# கலைஞரின் அறிவிப்பு வெறும் கண்துடைப்பு

சென்னை, ஆக. 31

தி. மு. க தலைவர் மு. கருணாநிதி தமது கட்சிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எந்த உறவும் கிடையாது என்று அறிவித்திருப்பது வெறும் கண்துடைப்பேயாகும்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல். எவ் தலைவர் பத்மநாபா கொலை தொடர்பான சந்தேக நபர்கள் சம்பந்தமாக அப்போதைய தி. மு. க அரசு நடந்து கொண்ட விதத்தைத் தமிழ் நாட்டு மக்கள் மறக்கவும் மாட்டார்கள்; மன்னிக்கவும் மாட்டார்கள். மக்களின் இந்த மனப்பாங்கை உணர்ந்துதான் அரசியல் கட்டாயங்களுக்காக திரு கருணாநிதி இவ்வாறு அறிவித்திருக்கலாம்.

— இவ்வாறு வாழப்பாடி இராமமூர்த்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

[உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## பார்வதிப்பிள்ளை [செல்லம்மா] குமாரவேலு

சரவணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி பார்வதிப்பிள்ளை குமாரவேலு [30-8-92]இல் சிவபதமடைந்தார்.

அன்னார் குமாரவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா, செல்லப்பா, தாமோதரம் பிள்ளை, இந்திரபூபதி, பசுபதிப்பிள்ளை [மலேசியா], பாலசிங்கம், தர்மலிங்கம் [மலேசியா], பூபதி ஆகியோரின் சகோதரியும், Dr. தில்லைநாயகம் [லண்டன்], பரமநாதன், சண்முகநாதன் [கனடா], திருநாவுக்கரசு [லண்டன்], பத்மநாதன் [இந்தியா], கனகேஸ்வரி, புவனேஸ்வரி [லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், லில்லி [லண்டன்], மகேஸ்வரி [ஆசிரியை, யா/இந்து மகளிர் கல்லூரி], புஸ்பராணி [யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை], புவனேஸ்வரி [ஓமான்], Dr. சண்முகலிங்கம் [அம்பேவல], பாலச்சந்திரன் [லண்டன்] ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [31-8-1992] திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

27, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
பரமநாதன் [மகன்]
[22366]

## திருமதி மரியம்மா பிலிப்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த திருமதி மரியம்மா பிலிப் 29 - 08 - 92 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பிலிப்பின் மனைவியும், புஸ்பராணி, யசிந்தா, வெனிற்றா ஆகியோரின் அன்புத் தாயாரும், A. B. செல்வராஜா, A. V. குலசதாஸ் [விவசாய திணைக்களம், கிளிநொச்சி], ஆகியோரின் மாமியாரும், இவோன் [ஜேர்மன்], கிளன்ரன், விஜேந்திரா, அனிற், கமிலன், மெலினி ஆகியோரின் பேர்த்தியும், ஜொன்லின், கவிஸ்ரன் ஆகியோரின் பூட்டியும், எலிசம்மா றோசலின், திரேசம்மா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 31 - 08 - 92 திங்கட்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

143/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
A B. செல்வராஜா
[மருமகன்]
(22369)

## திருமதி செல்வராஜா சிவபாக்கியம்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற ரயில் சமிக்ஞை உத்தியோகத்தர் செல்வராஜாவின் மனைவி சிவபாக்கியம் நேற்றிரவு காலமானார்.

அன்னார் திருமதி திருநாவுக்கரசு புவனேஸ்வரி, அரிச்சந்திரன், திருமதி சிங்கநாயகம் புனிதவதி, தேவராஜா (தேசாய்), திருமதி தனபாலசிங்கம் புஷ்பவதி ஆகியோரின் தாயாரும் —

வைத்திலிங்கம் திருநாவுக்கரசு, நவரத்தினம் சிங்கநாயகம், தம்பையா தனபாலசிங்கம் ஆகியோரின் மாமியாரும், திருமதி யோகரத்தினம், தயாரஞ்சனி [கனடா], தயாரங்கன் [கனடா], ரஞ்சினி [கனடா], தயாநிதி [கனடா], காலஞ்சென்ற உமாசங்கர், நவசங்கர், சிவசங்கர், சிவதேவி, உமாதேவி, தமயந்தி, பார்த்திபன் [கனடா], துஷ்யந்தி, சுகந்தி, பரதன், துஷ்யந்தன், நிசாந்தி ஆகியோரின் பேத்தியும் சயந்தன், தர்சிகா, மதுரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சண்டிலிப்பாய் மேற்கு, 'உமா பவனம்' இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று [31-08-1992] மாலை 4 மணிக்கு தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தனபாலசிங்கம் (கருணா) [மருமகன்]
சண்டிலிப்பாய் எஸ். எஸ் தேசாய்(மகன்)
(22372)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 228/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org